Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 341

வியாழக்கிழமை 02 நவம்பர் 2023

ஐப்பசி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## பல்கலை. தூபியில் சுடரேற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.2
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள மாவீரர் நினைவுத் தூபி சுற்றாடல் நேற்று மாணவர்களால் துப்புரவாக்கப்பட்டது. சுற்றாடலைத் துப்புரவாக்கிய மாணவர்கள், அங்கு சுடர் ஏற்றி அஞ்சலியும் செலுத்தினர். (எ-26-125)

## போராட்டத்தில் குதிக்கின்றது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, நவ.2
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று முதல் மாகாண ரீதியாக 24 மணித்தியால பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் »11

## மின்கட்டண உயர்வை ஏற்காத பெரமுன!

கொழும்பு, நவ.2
வரவு - செலவுத் திட்டத்துக்கு »11

# வரவு - செலவுத் திட்டம் டிசெ. 21 வாக்கெடுப்பு!

கொழும்பு, நவம்பர் 2
நாடாளுமன்றம் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை கூடும் என்றும், 2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் (ஒதுக்கீட்டுச் சட்டவரைவு) எதிர்வரும் 13ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நிதியமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். »11



## புருஷோத்தமனின் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், நவ.2
படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் செல்லத்துரை புருஷோத்தமனின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது. »12

## இலங்கைக்கு வந்தார் இந்திய நிதியமைச்சர்

### தேரர்களிடமும் ஆசீர்வாதம்

கொழும்பு, நவ.2
இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், கண்டியில் தலதா மாளிகை »11

## நேற்று முடங்கியது இலங்கை வங்கி!

### மாலையில் நிலைமை சீரானது

யாழ்ப்பாணம், நவ.2
நாடளாவிய ரீதியில் இலங்கை வங்கியின் இணையச் செயற்பாடுகள் நேற்றுச் செயலிழந்தன. அதனால் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டது என்று பொதுமக்கள் தெரிவித்தனர். »11

## சம்பள அதிகரிப்பால் நாட்டுக்கு ஆபத்தாம்!

### ஆராய்வோம் என்கிறார் நாமல்

கொழும்பு, நவ.2
2015ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கியதாலேயே பிரச்சினை ஏற்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கூறியிருக்கின்றார். அதனால் வரவு - »03

## 'ஐஸ்' பாவனையால் இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், நவ.2
நெடுந்தீவில் 25 வயது இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்த நிலையில், ஐஸ் போதைப் பொருளால் ஏற்பட்ட உயர் குருதி அழுத்தமே இறப்புக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது எனப் »03

## மோ.சைக்கிள் திருட்டுகள்; அச்சத்தில் யாழ்ப்பாணம்!

யாழ்ப்பாணம், ஒக்.2
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்துக்குள் சுமார் 23 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் »03

## 'உதயன்' செய்தி தொடர்பில் ரி.ஐ.டி.யினர் வாக்குமூலம் பதிவு

யாழ்ப்பாணம், நவ.2
2020 ஆண்டு உதயன் பத்திரிகையில் வெளியான செய்திகள் மற்றும் ஒளிப்படம் தொடர்பாக உதயன் பத்திரிகை செய்தி ஆசிரியர்களில் ஒருவரான கு.டிலீப்அமுதனிடம் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் »11

## முன்னாள் பீடாதிபதி சிதம்பரநாதன் காலமானார்

வவுனியா, நவ.2
விபத்தில் படுகாயமடைந்து »03

## சமுர்த்தி உத்தியோகத்தர் வீட்டில் நேற்றுத் திருட்டு

வவுனியா, நவ.2
வவுனியாவில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் பட்டப் பகலில் நகைகள் திருடப்பட்டுள்ளன. »10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அபிவிருத்திக்கு உலகவங்கி ஒத்துழைப்பு!



**யாழ்ப்பாணம், நவ. 2**

**வடமாகாண அபிவிருத்திக்கு உலகவங்கி ஒத்துழைப்புகளை வழங்கும் என்று, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் உறுதியளித்தார் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்னா பிஜெர்டே.**

உலக வங்கிக் குழுவினருக்கும், வடக்கு ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பொன்று வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போதே அவர்கள் ஆளுநரிடம் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கு மாகாண ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்குத் தெரியப்படுத்தியதுடன், வடமாகாணத்தில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிவதில் பெரும் சவால்களை எதிர்கொள்வதாகவும், கல்வி, சுயதொழில் உட்கட்டமைப்பு மற்றும் சிறுவர், பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்துக்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கியின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இவற்றைக் கேட்டறிந்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து தாம் மிகவும் கவனத்தில் கொள்வதாகவும் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் தொடர்பான திட்டங்களுக்கு தாம் கைகொடுப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன், வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் எனவும் உலகவங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-27)

# பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சியில் நாளை

கிளிநொச்சி நவ. 2

கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட திறன் விருத்தி நிலைய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்டச் செயலரும், மாவட்டப் பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழில்நுட்பப்பீடத்தின் பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வடக்கு கல்வி வலயப் பணிப்பாளர் அ.சிவனருள் ராஜா, கிளிநொச்சி தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் சி.கமலராஜன், பண்பாட்டலுவல்கள் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசாரத் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் இந்த நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு உயரிய விருதான 'கலைக்கிளி' விருதுகளும் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கான 'இளங்கலைஞர்' விருதுகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் தேசிய இலக்கியப் போட்டிகளில் மாவட்ட ரீதியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில் வழங்கல் நிகழ்வு மற்றும் கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9,113)



# வல்லபாய் பட்டேலுக்கு யாழில் அஞ்சலிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 2

இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேலின் 148ஆவது பிறந்ததினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தியாவின் யாழ்ப்பாணத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் நட்ராஜ் ஜெயபாஸ்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ். இந்தியத் துணைத்தூதரக பதவிநிலை அதிகாரிகள், அலுவலர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ம-20)

*மனைவியின் கடவுச்சீட்டில்*

# ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்ட யாழ்ப்பாணவாசி கைதானார்

தனது மனைவி என்று பொய் சொல்லி வேறொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச்செல்ல முற்பட்ட யாழ். வாசி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

எயார் அரேபியா விமானம் மூலம் பயணிக்கத் திட்டமிட்ட அவர்களின் நடத்தையில் சந்தேகமடைந்த அதிகாரிகள் அவர்களை அழைத்துச் சோதனை செய்த போதே, அந்த நபர் 29 வயதுப் பெண்ணொருவரை தனது மனைவி என்று பொய்யாகத் தெரிவித்து ஆட்கடத்தலில் ஈடுபட்டமை தெரியவந்தது. அவர் இதற்கு முன்னரும் இவ்வாறு பிறிதொரு பெண்ணொருவரை இத்தாலிக்கு அழைத்துச் சென்றிருந்தார் என்பதும் தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-6)

# நாடாளுமன்றில் துர்நடத்தை: 3 எம்.பி.க்களுக்குத் தடை

கொழும்பு, நவ. 2

நாடாளுமன்ற வளாகத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டு நாகரிகமற்ற வகையில் மோதலில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கும் ஒரு வாரத்துக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய் பெரேரா, ரோஹன பண்டார ஆகியோருக்கே இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழு சம்பவத்தின் சி.சி.ரி.வி. காணொலிக் காட்சிகளை ஆய்வு செய்து குறித்த 3 எம்.பி.க்களுக்கும் அழைப்பாணை அனுப்பியுள்ளது. விசாரணைக்குழு இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு, சபாநாயகர் அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# சங்குப்பிட்டிப் பாலம் உட்பட 30 பாலங்களில் பெரும்சேதம்

கொழும்பு, நவ. 2

யாழ்ப்பாணம், சங்குப்பிட்டிப் பாலம் உட்பட 30 பாலங்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன என்று ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிகவும் சேதமடைந்ததாக இனங்காணப்பட்டுள்ள பாலங்களில் சில தற்போது தற்காலிகத் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ள பாலங்களைச் சீரமைப்பதற்கு பெரும் நிதி தேவைப்படுகின்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நெடுஞ்சாலைகள் பல மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல பாலங்களும் காணப்படுகின்றன. அவற்றைப் புனரமைப்புச் செய்யவேண்டியுள்ளது. அதற்கான நிதி கோரப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்குக் கிடைக்கும் பற்றாக்குறையான வருமானத்திலேயே இவற்றுக்கும் நிதி ஒதுக்கவேண்டியுள்ளது - என்றார். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாட்டைப் பேண ஆளுக்கொரு மரம்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அழைப்பு

**யாழ்ப்பாணம், நவ. 2**

**நெருக்கடிகள் மிகுந்த போர்ச் சூழலிற்கூட 'இயற்கை எனது நண்பன்' என்று சொல்லி எமது சூழலைப் பேணிப் பாதுகாத்த மரபினரான நாம், இந்த கார்த்திகை மாதத்தில் பண்பாட்டின் தொடர்ச்சி பேணி - மாவீரரை நினைவுகூர்ந்து - ஆளுக்கொரு மரம் நடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அழைப்பு விடுத்துள்ளார்.**

ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாக வடக்கு மாகாணசபையால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதனைமுன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

நெருக்கடிகள் மிகுந்த போர்ச் சூழலிற்கூட இயற்கை எனது நண்பன் என்று சொல்லி எமது சூழலைப் பேணிப் பாதுகாத்து இயற்கையோடு இசைந்த வாழ்வியலைக் கொண்ட மரபினர் நாங்கள். தற்போது காலநிலை மாற்றம் மிக மோசமாகத் தனது தாக்குதல்களைத் தொடுக்க ஆரம்பித்திருக்கிறது.

இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த பூகோளச் சராசரி வெப்பநிலையைக் கொண்ட மாதமாக இந்த ஆண்டின் ஜூலை மாதம் பதிவாகியுள்ளது.

பூமி சூடாகுவதால் துருவப் பகுதிகளில் பனிமலைகள் உருகி கடல்மட்டம் உயர்வடைகிறது. இதனால் இலங்கையின் கரையோரப் பகுதிகளும் மூழ்கடிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த அனர்த்தங்களுக்குக் கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளை அளவுகணக்கில்லாமல் கபளீகரம் செய்துவருவதே அடிப்படைக் காரணமாகும்.

நாமும் போர் தின்றது போக எஞ்சியிருக்கும் காடுகளையும் அபிவிருத்தியின் பெயரால் அழிக்கத் தலைப்பட்டிருக்கிறோம்.

பூமி வெப்பமடைதல் வெறுமனே காலநிலை மாற்றத்துடன் அடங்கிப் போய்விடும் ஒன்று அல்ல. கடும் வறட்சி, குடிதண்ணீர் பற்றாக்குறை, பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சி, உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறி என்பவற்றையும் எதிர்நோக்க வேண்டிவரும்.

எனவே போரின் கொடிய வலிகளைச் சுமந்து நிற்கும் ஈழத் தமிழினம் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் கற்பனைக்கும் எட்டாத் தாங்கொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடும் - என்றார். (ச-27)

## மோ.சைக்கிள்...

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இணுவிலில் கடந்த திங்கட்கிழமை வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த 'பல்சர்' ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மட்டும் அண்மைய நாள்களில் சுமார் 14 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களே அதிகம் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்படவில்லை.

திருடப்படும் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி மாவட்டத்தில் வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. ஆயினும் பெரும்பாலான மோட்டார் சைக்கிள்களுக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது.

தொடரும் மோட்டார் சைக்கிள் திருட்டுகளால் பொதுமக்கள் தங்கள் மோட்டார் சைக்கிள்களைத் தரித்துவிட்டுச் செல்வதற்கு அஞ்சும் நிலைமை தோன்றியுள்ளது. இது தொடர்பாகப் பொலிஸார் விரைவானநடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுபொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-எ-26)

## முன்னாள்...

சிகிச்சை பெற்றுவந்த வவுனியா கல்வியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலமானார்.

கடந்த சனிக்கிழமை இரவு வவுனியா, சாஸ்திரி கூழாங்குளத்தில் கட்டாக்காலி மாட்டுடன் மோதி இவர் விபத்துக்குள்ளாகியிருந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

அதேவேளை, வவுனியா, தாண்டிக்குளம் - கல்மடு பிரதான வீதியில் இரவுவேளைகளில் பயணிப்போர் கட்டாக்காலி மாடுகளால் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-எ)

## சம்பள...

செலவுத் திட்ட உள்ளடக்கங்களைப் பார்த்தே ஆதரவளிப்பது தொடர்பில் முடிவெடுப்போம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை.

வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிப்பது தொடர்பில் தற்போது கூறமுடியாது. பாதீடு முன்வைக்கப்பட்ட பின்னர் அதில் உள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டே முடிவு எடுக்கப்படும். அதேபோல ஆதரவு வழங்குவது தொடர்பாகவும் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் 13 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளது. 2015ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கியதாலேயே பிரச்சினை ஏற்பட்டது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

அதனால் உள்ளடக்கங்களை ஆராய்ந்த பின்னரே கட்சி முடிவெடுக்கும். அரசியல் நோக்கங்களுக்காக அன்றி, நாடு தொடர்பாகச் சிந்தித்தே தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (அ-எ-44)

## 'ஐஸ்'...

பொலிஸார் தெரிவித்தனர். நெடுந்தீவு மேற்கில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. (அ-எ-27)



# புதினம் தெரியுமோ?

**நாட்டில செய்யவேண்டிய எத்தினையோ வேலை கிடக்க, அதையெல்லாம் விட்டிட்டு 'யாழ்ப்பாணக் கம்பஸூக்குள்ள இருக்கிற முள்ளிவாய்க்கால் தூபி முறைப்படி அனுமதி வாங்கித்தான் கட்டுப்பட்டதோ? அதைக் கட்டிறதுக்கு ஆரெல்லாம் காசு அனுப்பினவை? புலிகளோட தொடர்புள்ள ஆக்கள் ஏதும் காசு அனுப்பினவையா?' எண்டெல்லாம் ஆராயிறதுதான் இப்ப அரசாங்கத்துக்கு அவசரமான அலுவல் போல கிடக்கு. சிலவேளை உந்தத் தூபியைக் கட்டினதாலதான் இலங்கையின்ர பொருளாதாரம் சரிஞ்சு போட்டுதெண்டு ஆரும் சாத்திரிமார் சொன்னாங்களோ தெரியேலை. இப்ப ரண்டுமூண்டு நாளா கம்பஸூக்க வந்த குழு எல்லா பைல்களையும் எடுத்து, தூசு தட்டி , பாக்கினமாம்.**

**தூபி சம்பந்தமான கணக்கு வழக்குகள், காசுகள் வந்த விதம், இதைக் கட்டுறதில அக்கறை எடுத்த ஆக்கள் எண்ட விசயங்களை மட்டும் பாக்காமல், வேற சில விசயங்களையும் விசாரணைக்குழு நோண்டுதாம். முக்கியமா துணைவேந்தருக்கு எதிராப் போடுப்பட்ட எல்லாப் 'பெட்டிசங்களிலும்' என்னென்ன குற்றச்சாட்டுகள் சொல்லுப்பட்டுதோ, அதுகள் சம்பந்தமாவெல்லாம் பைல்களை பார்க்கினமாம். 'சமூகச் சமையலறை' விசயமாக் கூட அக்கறை எடுக்கினமாம். அது தமிழ்ப் பிள்ளையளுக்கு மட்டுமில்ல, சிங்களப் பிள்ளையளுக்கும் பிரியோசனமான ஒரு திட்டம். எத்தினையோ சிங்களச் சனங்கள் 'நீங்கள் எங்கட பிள்ளைக்கு இப்பிடி ஒரு திட்டத்தால் சாப்பாடு குடுக்கிறதால எங்களுக்குச் செலவு மிச்சம். நாங்கள் அந்தக் காசில இஞ்ச வயிறார சாப்பிடுறம். எங்கட பிள்ளையும் கம்பஸில பசியில்லாமல் இருக்குது. இதுக்கு எப்பிடி நன்றி சொல்றதெண்டே தெரியேலை எண்டெல்லாம் கடிதங்களும் கம்பஸூக்கு எழுதியிருக்குதுகள். அப்பிடிப்பட்ட நல்ல திட்டத்துக்கு தன்ர செல்வாக்கைப் பயன்படுத்தி மச்சான், இப்பிடி ஒரு திட்டம் தொடங்கியிருக்கிறம். பிள்ளையளுக்கு ஏதும் செய்ய விரும்பினால் அதுக்கு காசு போடு' எண்டு துணைவேந்தர் உரிமையோட கொடையாளியளிட்ட சேர்த்த காசு, பொருள்களை வைச்சுத்தான் அந்தத் திட்டம் இப்பிடி வெற்றிகரமா ஓடுது. இப்ப கம்பஸ் பிள்ளையள் இப்பிடி பட்டினியிருக்காமல் பசியாறுறது சிலருக்குப் பிடிக்காமல், இப்பிடி பெட்டிசம் போட்டு அதுக்கும் ஆப்பு வைக்க வெளிக்கிடுகினம் போல.**

**இந்த விசாரணையில இன்னொரு முக்கியமான விசயமும் நடந்திருக்கு. தூபியை ஆராய மூண்டு பேர் வருவினம் எண்டுதான் முதல்ல கடிதம் வந்தது. ஆனால் ஏழு பேர் வந்திருக்கினம். அதில மூண்டுபேர்தான் பைல் எல்லாம் பார்த்திருக்கினம். அவையோட எடுப்புக்குத் தொடுப்பா வந்த மிச்ச நாலுபேரும் கம்பஸைச் சுத்தி படம் எடுக்கிறதிலையும், முக்கியமான விசயங்கள் உள்ள பைல்களை போனில போட்டோ எடுத்து வைக்கிறதிலையும் தான் வலுகவனமா இருந்தவையாம். அப்பிடி அந்த எடுப்புக்குத் தொடுப்பா வந்த நாலுபேரும் தனிக்காரில வந்திருக்கினம். 'அப்படி தனிக்காரில வந்த நாலுபேரும் ஆர்? மூண்டு பேர் வாறன் எண்டிட்டு ஏன் ஏழு பேர் வந்தவை?' எண்டெல்லாம் பொலிஸ்காரார் தலையைப் பிய்க்கினமாம். 'மேலதிகமா வந்த நாலுபேரும் ஆமி இன்ரலிஜென்ட்' எண்டும் ஒரு கதை உலாவுது. உண்மை, பொய் அரசாங்கத்துக்குத்தான் வெளிச்சம்.**



\- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனின் பரிசுக்குவியல்



**தினம் ஒரு பரிசு**

இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையிலான இன்றைய (02.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

**மெகா பரிசு**

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

### இன்றைய ஆட்டம்

இலங்கை — இந்தியா

இடம் : வான்கடே
நேரம்: பி.ப. 2.00

SBI

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா - இலங்கை வரவேற்கிறது!!!

இலங்கையில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களான
திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில்
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா தனது பிரயாணத்தை ஆரம்பிக்கின்றது

தங்கு தடையற்ற சேவைகளைக் கொண்ட ஓர் உலகைக் கண்டறியவும்
காலத்தால் பரீட்சிக்கப்பட்ட எமது பாரம்பரியத்தின் மீது நம்பிக்கை கொள்ளவும்
மாபெரும் திறப்பு விழாக்களில் இணைந்து கொண்டு
செழுமைமிகு நிதி எதிர்காலத்தில் காலடியெடுத்து வையுங்கள்.

02 நவம்பர் 2023 இல் திருகோணமலை - கிளை
இல. 179, பிரதான வீதி, திருகோணமலை.

03 நவம்பர் 2023 இல் யாழ்ப்பாணம் - உப அலுவலகம்
எல்ஜசி லங்கா டவர்,
இல. 34, சேர் வைத்திலிங்கம் துரைசாமி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா - இலங்கை
உங்களுடன் 1964 ஆம் ஆண்டு முதல்

# தெ.ஆபிரிக்கா பக்கம் அரையிறுதிக் காற்று!



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், நியூஸிலாந்தைத் தோற்கடித்து அரையிறுதிக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தியது தென்னாபிரிக்கா அணி. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடுவதில் தென்னாபிரிக்க அணி இந்தத் தொடரில் தடுமாறுவது அப்பட்டமாகத் தெரிந்தும் நியூஸிலாந்து அணி தென்னாபிரிக்க அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தமை தவறு என்று வர்ணனையாளர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

பவுமா நேற்றும் ஏமாற்றினார். எனினும், குயின்டன் டி ஹொக் மற்றும் வான் டெர் டசன் இருவரும் அற்புதமாக ஆடி அணியைப் பலப்படுத்தினார்கள். நியூஸிலாந்தின் பந்துவீச்சாளர்களுக்கு சிறு வாய்ப்பைக்கூட வழங்காமல் இருவரும் ஆடிக்கொண்டிருந்தனர். இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைக் கடந்தது. இலக்குச் சரிக்கப்பட்டபாடில்லை. அணி 238 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், அதாவது இணைப்பாட்டமாக 200 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குயின்டன். வான் டெர் டசனும் சதம் கடந்து 133 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மில்லர் 30 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்று கடைசிக்கட்ட அதிரடியைக் காண்பிக்க 4 விக்கெட்டுகளை இழந்து 357 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்க அணி.

பந்துவீச்சில் சவுத்தி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் கொன்வே. ரச்சின் ரவீந்திராவும் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நியூஸிலாந்து அணி தன் முக்கியமான வீரர்களை இழந்து ஆட்டம் கண்டது. வில் யங் 33, டாரி மிச்செல் 24, கிளென் பிலிப்ஸ் ஆகியோர் மட்டுமே பதின்ம ஓட்டங்களைத் தாண்டிய வீரர்களாகப் பதிவானார்கள். முடிவில் 167 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்களால் தோல்வியடைந்தது நியூஸிலாந்து. (ம)

# விபத்தில் சிக்கிய மக்ஸ்வெல் அடுத்த ஆட்டத்தில் இல்லை!



அவுஸ்திரேலிய அணியின் அதிரடி வீரரான மக்ஸ்வெல், விபத்தில் சிக்கியுள்ளார் என்றும் இதனால் அவர் அடுத்த ஆட்டத்தில் விளையாடமாட்டார் எனவும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அஹமதாபாத்தில் அவுஸ்திரேலிய அணி தற்போது முகாமிட்டுள்ளது. அங்கு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை அவுஸ்திரேலியா சந்திக்கின்றது. இந்த நிலையில், தான் தங்கியுள்ள விடுதியில் இருந்து அணியுடன் இணைவதற்காக வாகனமொன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது மக்ஸ்வெல் விபத்தில் சிக்கியுள்ளார். இதனால் அவருக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தை மக்ஸ்வெல் தவறவிடுவார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது. (ம)

## தினம் ஒரு பரிசு — நாள் 27 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| ச.சேயோன் | - இணுவில் கிழக்கு | என்.நஜாத் | - மன்னார் |
| ந.விஜயகுமாரன் | - கொக்குவில் | வ.மகிந்தன் | - திருக்கேதீஸ்வரம் |
| ம.சரண்ணியா | - நல்லூர் | சி.எட்வின்ராசா | - காங்கேசன்துறை |
| குணபாலன் | - அளவெட்டி | து.பிரியமலர் | - ஊறணி |
| ம.நிகேதன் | - சாவகச்சேரி | எல்.ஜானுஜா | - கருங்காலிக்குளம் |
| ஜி.துபீசன் | - கொக்குவில் | பி.பிரதீஷ் | - அளம்பில் |
| வி.அபிராமி | - தொல்புரம் | ஜே.தேனுப்பிரியா | - நானாட்டான் |
| ச.வசந்தகுமார் | - நெடுங்கேணி | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஓயாது நீளும் வரிவதை!

**2024** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நாட்டில் 'வற்' வரி அதிகரிக்கப்படும் என்றும், சுமார் 18 வீதமளவுக்கு இந்த வரி அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்திருக்கின்றார். இலங்கைக்கு கடன் வழங்குவதாக இருந்தால், இலங்கையின் வருவாயை அதிகரிப்பதற்கு செய்யப்படவேண்டிய விடயங்களாக சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த முக்கியமான நிபந்தனைகளின் தொடர்ச்சியாகவே இந்தப் பெறுமதிசேர் வரி அதிகரிப்பை (வற்) நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வற் வரி என்று சொல்லப்படும் இந்தப் பெறுமதி சேர் வரியானது, 'அபாயகரமான வரிக்கட்டமைப்பாகவே' அடையாளப்படுத்தப்படுகின்றது. ஒரு பொருள் இறக்குமதி செய்யப்பட்ட பிற்பாடு, இலங்கையின் எல்லைக்குள் அந்தப் பொருளின் விற்பனைச் சுழற்சி மீது வைக்கப்படும் வரி விதிப்பே பெறுமதி சேர் வரி. இதன்படி இந்த வரிச்சுமை நுகர்வோரையே (பொதுமக்களை) நேரடியாகத் தாக்கும். ஒரு பொருள் சந்தைப்படுத்தப்படும்போது, அதன் இறுதிப் பயன்பாட்டாளரால் பொறுப்பேற்கப்படும் இந்த வரி, எவ்வளவுக்குஎவ்வளவு நேர்த்தியாகவிதிக்கப்படுகின்றதோ – கனதியாகின்றதோ – அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும். ஆனால் அதன் மறுபக்கம் கொடியது. உணவுகள், பொருள்களுக்கு மட்டுமல்லாமல் சேவைகளுக்கும் பெறுமதிசேர் வரிவிதிக்கப்பட்டு விலையேற்றத்தால் ஆலைவாயில் அகப்பட்ட கரும்பைப்போன்று மக்கள் நெருக்கப்படுவார்கள். ஆதலால், பெறுமதி சேர் வரியை அதிகரிக்கும் இந்தத் திட்டமானது இலங்கை மக்களின் அன்றாட வாழ்வுக்கு அபாயச்சங்கு ஊதப்போகும் விடயமே அன்றி வேறில்லை.

இலங்கையின் பொருளாதாரம் இறக்குமதிப் பொருள்களை மையப்படுத்தியதாகவே நகர்ந்து – சுழன்று கொண்டிருக்கின்றது. தற்சார்பு நிலையை அடையக்கூடிய விடயங்களில்கூட இறக்குமதியை நம்பித்தான் இலங்கையர்களின் காலங்கள் கடந்து செல்கின்றன. இவ்வாறிருக்கையில், இறக்குமதிப் பொருள்களை இலக்குவைக்கும் பெறுமதிசேர் வரியானது ஒவ்வொரு கொள்வனவிலும் சேவை நாடலிலும் இலங்கையர்களை வதைக்கும். பால், இறைச்சி, மீன், கால்நடைத்தீவனங்கள் என மிக இலகுவாகத் தன்னிறைவு காணப்பட வேண்டிய துறைகளில் தன்னிறைவு கண்டிருந்தால்கூட பெறுமதிசேர் வரியின் பாதகத்தனத்திலிருந்து இலங்கையர்கள் ஓரளவேனும் தொலைவில் இருந்திருக்கலாம். ஆனால், இறக்குமதியைத் தவிர வேறெதையும் அறியாத, கையாலாகாதரணில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு விசுவாசம் காட்டுவதற்காக வரிகளால் மக்களை வதைப்பது கலப்பற்ற அபத்தமன்றி வேறொன்றுமில்லை.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த வருமான அதிகரிப்பானது தற்சார்புப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். தற்சார்புப் பொருளாதாரம் பலப்பட்டால் இறக்குமதிச் செலவுகள் குறையும். டொலரின் வெளிச்செல்கை இல்லாமலாகும். ஒரு பொருளை உள்ளூரில் உற்பத்தி செய்வதிலும் பார்க்க பலமடங்கு பணத்தை, பிறிதொரு நாட்டில் உற்பத்தி செய்த அதேபொருளுக்காக வாரி வழங்கிக்கொண்டிருப்பதுடன் நில்லாது, தன் சிந்தனைப் பிறழ்வான நடத்தைக்கு பொதுமக்களைப் பலிக்கடாவாக்குவது கொஞ்சமும் நியாயமல்ல.

### வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.”

**- வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)**






## எமது வளங்கள் சூறையாடப்பட்டு வெளிநாட்டுக்குத் தாரைவார்ப்பு

### தமிழ்ப் பிரதிநிதிகள் அக்கறையில்லை மன். மீனவ சமாசச் செயலாளர் ஆதங்கம்

**மன்னார், நவ. 2**

**மன்னாரின் இயற்கை வளங்கள் ஒவ்வொன்றாக வெளிநாட்டுக்குத் தாரைவார்க்கப்பட்டு வருகின்றன. தற்போது புதிய கடற்றொழில் சட்டம் எனும் பெயரால் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் எமது மாவட்டம் வரைபடத்திலிருந்து காணாமற் போகக்கூடிய அபாயம் உண்டாகும் என்று மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் ஆலம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் ஆலம் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களான சூரிய சக்தி, கடல்வளம், நிலம் என்பன அபிவிருத்தி என்ற போர்வையில் அந்நிய நாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இயற்கை வளச் சுரண்டல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அபிவிருத்தி என்ற போர்வையில் மிகப்பெரிய காற்றாலைத் திட்டம் ஒன்றுக்கு நிலத்தில் பெரிய துளைகள் இடப்படவுள்ளன.

அதுமட்டுமல்லாது தற்போது புதிய கடற்றொழில் சட்டம் என்ற போர்வையில் வெளிநாட்டுப் படகுகளை எமது பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

சூன்யமாகவுள்ள எதிர்கால நிலை தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அக்கறையின்றியுள்ளனர். இனியும் இதற்கெதிராக அனைவரும் ஒன்றிணைந்து குரலெழுப்பாவிடின் மிகப்பெரிய அபாயநிலையை சந்திக்க நேரிடும் - என்றார். (ச-20)

## வன்னிவிளாங்குளம் துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள்



முல்லைத்தீவு, நவ. 2

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கார்த்திகை மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினம் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில், மாவீரர் துயிலுமில்லங்கள் அண்மைக்காலங்களாக துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே வன்னிவிளாங்குளம் துயிலுமில்லத்தில் நேற்று துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது மாவீரர்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ம-19)

**நாளை**

**03.11.2023**
**வெள்ளிக்கிழமை**
**ஐப்பசி 17**

சுபநேரம் : 06.04 - 07.34
ராகுகாலம் : 10.34 - 12.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். அவசரப்பட்டு அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடவேண்டாம்.

**இடபம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**துலாம்:** கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பாராத அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. நெடு நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

# நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கி ழமை காலை 9 மணிக்கு கல்லூரி முதல்வர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வல யப் பணிப்பாளர் க.யெ.பிறட்லி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-63)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், நவ.2

சுழிபுரம் திருவருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி திருக்கோயிலின் மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.13 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று தீபத்திருநாளான 27ஆம் திகதி திங்கட்கிழமை 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (ய)

## மரண அறிவித்தல்



### பொன்னையா பரானந்தா
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

இருபாலை வேளாந்தோப்பை பிறப்பிடமாகவும் நல்லூர், குகன் வீதி அரியாலையினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரானந்தா (ஓய்வுபெற்ற தபால் ஊழியரும், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக வயலின் ஆசிரியர்) நேற்று (01.11.2023 ) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், சாயீஸ்வரி (கிராம அலுவலர் பிரதேச செயலகம், நல்லூர்), சாந்திநிகேதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜித்சுஜிந்தனின் மாமனாரும், காலஞ்சென்ற ஆத்மானந்தா சுகானந்தா, ஸ்ரீரஞ்சினி அம்பாள் மற்றும் கோதைநாயகி அம்பாள், விபுலானந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கம்சிகா, விதுஷியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2023) வியாழக்கிழமை இல.7, குகன் வீதி, அரியாலையில் அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26781)A-1

# INVITATION FOR BID (2023/15)
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

*"Bidding will be conducted through National Competitive Bidding in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated, 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents
5. Interested bidders may obtain further information from **address given below** in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971)** from **9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From 02.11.2023 until 15.11.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 09.11.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 16.11.2023 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/Unicef/W/27 | Renovation of PHC Building at Kuppilan and Kuddiyappulam | 1.22 | 72 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 01.02.2024 |
| NP/04/41/2023/Unicef/W/31 | Renovation of PHC at Alvai West. | 0.59 | 66 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 6,000.00 | Till 01.02.2024 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service, Jaffna.**

(N-1)

## வாடகைக்கு

**சுன்னாகம் பஸ் நிலையத்தில் கடை ஒன்று வாடகைக்குள்ளது**

தேவையுள்ளவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும்.

(cs52694 AK - 1)

**077 853 5599**

## தவறவிடப்பட்டது

யாழ்.பல்கலைக்கழக முன்றலிலிருந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதி வரை சென்ற நபரின் தேசிய அடையாள அட்டை ஆண், பெண் இருவரினதும், மக்கள் வங்கி கணக்குப் புத்தகம், ஊழியர் அடையாள அட்டை அதனுடன் ஓய்வூதிய பத்திரங்கள் ஆகியவையுடன் கூடிய Clear bag தவறவிடப்பட்டுள்ளது. அவற்றை கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
**076 591 3406, 076 380 9793, 077 052 9401**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டும் வாழ்த்தும்

## மணிவிழா வாழ்த்து



எனது வலயத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி இன்று மணி விழாக் காணும் நாயகியை வாழ்த்துவதில் அகமிக மகிழ்கின்றேன். தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் என்பது போல் ஆசிரியத்து வத்திற்கு உரைகல்லாக விளங்கியவர்.

மணிவிழா நாயகி திருமதி டெய்சிராணி நாகேந்திரன் மாணவர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர் அவருடைய ஓய்வுக்காலம் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்து கின்றேன்.

**பொ. ரவிச்சந்திரன்,**
**வலயகல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

## மணிவிழா வாழ்த்து



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த ஆறு வருடங் களாக சேவையாற்றி, ஆசிரியப் பணியில் 34 வருடங்களை நிறைவுசெய்து ஓய்வுபெறும் திருமதி டெய்சிராணி நாகேந்திரன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்படைய வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருமதி டெ. நாகேந்திரன் அவர்கள் க.பொ.த. உயர்தர வகுப்பில் அளவையியலும் விஞ்ஞான முறையும் பாடத்தை மாணவர்களுக்கு சிறப்பாகக் கற்பித்துவந்தவர். கற்பித்தல் அனுபவம் வாய்ந்த மூத்த ஆசிரியராக விளங்கிய அவர் மாண வர்களின் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ப கற்பிகும் திறன் கொண்டவராகவும் விளங்கினார். பல மாணவர்கள் உயர் பெறுபேறு பெறு வதற்குக் காரணமாகத் திகழ்ந்தவர். க.பொ.த. உயர்தர கலைப் பிரிவுப் பரீட்சைகளை முன்னின்று பொறுப்பேற்று நடாத்தியவர். கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் மத்திய கல்லூரியின் இந்து மாமன்றத்தின் பொருளாளராக விளங்கி மன்றச் செயற் பாடுகளுக்குப் பக்க பலமாகச் செயற்பட்டவர். கல்லூரி நூலகச் செயற்பாடுகளுக்குப் பெரும்பங்கினை ஆற்றி மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடு களுக்கும் துணையாக விளங்கியவர். அவர்களின் அளப் பரிய சேவைகளுக்கு நன்றிகளையும் பாராட்டுதல் களையும் தெரிவித்து மகிழ்கின்றேன். எப்பொழுதும் துடிப்புள்ள ஆசிரியராகச் செயற்பட்டு தனக்கு வழங்கப்படுகின்ற பொறுப் புக்களை செவ்வனவே ஆற்றும் திறனுடை[illegible]ர் சிரித்த முகத்துடனும் சிநேகபூர்வ மனப்பான்மையுட[illegible] கல்லூரி யில் வலம் வருபவர். சைவத் தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக் காத்து நிற்கின்ற அவரின் ஓய்வுக்காலம் சிறக்கவும் அவர் தம் குடும்பத்தினருடன் என்றும் மகிழ்வோடும் நீண்ட ஆயுளோடு ஆரோக்கியமும் பெற்று வாழ மனதார இறை வனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.பூபாலசிங்கம்,**
**உதவிக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்.**

திருமதி

## டெய்சிராணி நாகேந்திரன்

**ஆசிரியை - S.L.T.S. 1**

**(Sp. Trd (Art). B.A., Dip. in. Edu ( Merit)**




**சேவை விவரம்**

- **யா/ புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம்**
  **28.11.1989 - 19.01.1992**
- **யா/ கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை**
  **20.01.1992 - 31.12.1993**
- **யா/ புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலயம்**
  **01.01.1994 - 18.01.1994**
- **யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்**
  **19.01.1994 - 16.10.2017**
- **யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
  **17.10.2017 - 01.11.2023**

ஆசிரியர் வட்டம் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியில் அளவையியல் பாட ஆசிரிய ராகவும் இந்து மாமன்றத்தின் பொறுப்பாளராகவும் கல்லூரியில் நடைபெறுகின்ற விழாக்களில் தன் பணியை செவ்வனே செய்துவருகின்ற கரும திருதியாக விளங்குகின்ற மணிவிழா நாயகி திருமதி. டெய்சிராணி நாகேந்திரன் அவர்கள் துடிப்போடு செயற்படுகின்ற ஒருவராகவும் சளைக்காத மனத் திண்மை கொண்டவராகவும் காலைப் பிரார்த் தனையை முன்னின்று நடாத்தி சமய விழுமியங் களைப் புகட்டிய மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் பெருமகிழ்வுறு கின்றோம்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்." குறட்பாவிற்கு ஏற்ப இந்து மாமன்றத்தை சிறந்த முறையில் செயற்பட வைத்தவர். மணிவிழா ஆசிரியரின் ஓய்வுக்காலம் சகல சௌபாக்கியங்களோடு நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்திகின்றேன்.

**சி.இந்திரகுமார்,**
**அதிபர்,**
**யா/ மத்திய கல்லூரி.**

## மணிவிழா வாழ்த்து




எங்கள் பாடசாலையில் ஆறு வருடங்களாக பணியாற்றி ஆசிரிய சேவையில் 34 வருடங்கள் நிறைவில் இன்று மணிவிழாக் காணும் நாயகி திருமதி டெய்சிராணி நாகேந்திரன் அவர்களை வாழ்த்துவதில் உளமார மகிழ்வடைகின்றேன் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பது போல எத்தனையோ மாணவர்களை உயர்த்தி பெருமை கண்ட ஆசிரியை அவர்கள் இந்து மாமன்றத்தில் என்னோடு உறுதுணையாக செயற்பட்டவர் கடமையை கண்ணென மதித்து செயற்படும் பண்பினர். சேவை செய்வதே பரமானந்தம் எனப் பணியாற்றிய மணிவிழா நாயகியின் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**ஆ. நவநீதகிருஸ்ணன்**
**தலைவர்,**
**ஆசிரியர் வட்டம்.**

---

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22 . 05 . 1947 | 01 . 11 . 2023 |



## திரு. தியாகராசா விநாயகமூர்த்தி

**(உரிமையாளர் - ஜெயவினாயகம்ஸ் ஹாட்வெயார்ஸ், வவுனியா)**

அளவெட்டி மேற்கினை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தியாகராசா விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (01.11.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் யோகேஸ்வரி, தனபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பத்மாவதி அவர்களின் பாசமிகு கணவரும், வானிலா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), செந்தூரன், சுமங்கலா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியரூபன் (பிரதேச செயலகம் - தெல்லிப்பளை), பிளைவின் (பிரதேச செயலகம் - நல்லூர்) ஆகியோரின் மாமனாரும், வித்தகன், நர்த்தனா, அகர்வின், அனன்யா, ஆஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2023) வியாழக்கிழமை முற் பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல.117/5, கண்மணி லேன்,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்புகளுக்கு:**
**077 9568 670, 077 3462 425**

---

# மரண அறிவித்தல்.

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 - 10 - 1943 | 01 - 11 - 2023 |



## அமரர் சபாரத்தினம் தியாகராசா

மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரியினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சபாரத்தினம் தியாகராசா நேற்று (01.11.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சரோஜினிதேவி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் அன்னம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், உதயரஜனி, குமுதரஜனி, லோகதீசன் மற்றும் தவரஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அன்னரத்தினம் மற்றும் புனிதவதி, தையல்நாயகி, இராமநாதன் கோபாலகிருஸ்ணன், யோகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோ-தரனும், காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் வல்லிபுரம், காலஞ்சென்ற கந்தமூர்த்தி மற்றும் பாலயோகினி, சிவனே ஸ்வரி, காந்தீஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்செ-சன்றவர்களான தவகுல சிங்கம், ஆனந்தகுமார், கோடீஸ்வரி, சங்கர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கேசராஜ், சரண்யா, துஷாந், அபிசங்கரி, அபீசன், அபிராம், அபினா, ரக்சனா மற்றும் அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,எகந்தியாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
**மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரி**
**தொடர்பு : 077 007 3991**

cr 40886 (Ak.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் நூலக புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 2

தேசியவாசிப்புமாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொதுநூலகமும் ஸ்ரீலங்கா புத்தக சாலையும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணி வரை கண்காட்சி நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-66)



## பெண்களிடம் வழிப்பறி; சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணம், கோப்பாய்ப் பகுதியில் விரத காலத்துக்குச் செல்லும் பெண்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்ட பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டடியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவால் அவர் கைதுசெய்யப்பட்ட நிலையில், சந்தேகநபரிடமிருந்து 10 பவுண் நகைகள், கைப்பைகள், தொலைபேசிகள், வங்கி அட்டைகள், வழிப்பறிக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ம-26-20)


யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)

இல.52, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குழி யாழ்ப்பாணம்.

பதவி வெற்றிடம்

பதவி : அச்சு இயந்திர இயக்குனர் (ஒவ்செற்)

குறியீட்டு இல : 318 /14

சம்பள அளவுத்திட்டம் : 17900 - 155 x 10 -165 x 10 -21100

(சுற்று நிரூபம் 02 / 2022 இன் படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

க.பொ.த் (சாதாரணதரம்) பரீட்சையில் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் தமிழ் / சிங்கள உட்பட 06 பாடங்களில் சித்தியும். இயந்திர இயக்குனர் பதவியில் ஆகக்குறைந்தது ஒரு (01) வருட அனுபவம்.

வயது : 18 - 45

ஏனைய விடயங்கள்

சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் மற்றும் படிகள் வழங்கப்படும்
தகைமைச் சான்றிதழ்களின் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்
தகைமையற்ற, சரியாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்
விண்ணப்ப முடிவுத் திகதி - 09.11.2023

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சமாச அலுவலக நேரத்தில் விண்ணப்பபடிவங்களை ரூ. 50.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து), இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

திரு.செ.செல்வராசா
தலைவர்,
021 222 5072

திகதி : 02.11.2023

(cr. ) (40888) (N.1)


## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 23, டேவிட் வீதி, 113 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திசவீரசிங்கம் பெண் எலிசபெத் லெவீனா என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மெர்வின் கியூக் அரியராஜா எதிர்மன்னசிங்கி (Mervyn Hugh Ariyarajah Edirimanasinghe). யோசெப் லென்னி சுவேந்திரா எதிர்மன்னசிங்கி (Joseph Lennie Suvendra Edirimanasinghe). நளினி கார்மலிற்றா தேவநாயகம் அல்லது எதிர்மன்னசிங்கி (Nalinie Carmelita Thevanayagam nee Edirimanasinghe). அன்ரனிற்றா கிருஸ்ணசிங்கம் அல்லது எதிர்மன்னசிங்கி (Antonette Krishnasingham nee Edirimanasinghe) ஆகியோர் 25.05.2013 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சாரா எரிக்கா லோரன்ஸ் முகதாவில் 12 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் தமது சகோதரி ஏஞ்சலா ஜெனேவி தாங்கரஜனி தங்கராசா அல்லது எதிர்மன்னசிங்கி (Angela Genevie Thangarajinee Thambirasa nee Edirimanasinghe) என்பவரின் 65 வருடங்களுக்கு மேலாக நீண்ட நெடுங்கால தங்குதடையற்ற இடையூறற்ற ஆட்சியிலேயே இருந்தது எனவும். அவர் காலஞ்சென்ற பின்னர் தங்களின் ஆட்சியில் இருப்பதாகவும் வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை மெர்வின் கியூக் அரியராஜா எதிர்மன்னசிங்கி (Mervyn Hugh Ariyarajah Edirimanasinghe). யோசெப் லென்னி சுவேந்திரா எதிர்மன்னசிங்கி (Joseph Lennie Suvendra Edirimanasinghe). றெஜினல்ட் ராஜேஸ்வரன் எதிர்மன்னசிங்கி (Reginald Rajeswaran Edirimanasinghe). அன்ரனிற்றா கிருஸ்ணசிங்கம் அல்லது எதிர்மன்னசிங்கி (Antonette Krishnasingham nee Edirimanasinghe) ஆகியோர் 25.05.2013 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சாரா எரிக்கா லோரன்ஸ் முகதாவில் 13 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் நளினி கார்மலிற்றா தேவநாயகம் அல்லது எதிர்மன்னசிங்கி (Nalinie Carmelita Thevanayagam nee Edirimanasinghe) என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை கிராமசேவையாளர் பிரிவு J/70 ல் குருநகர் கிழக்கில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 113 இனைக் கொண்ட டேவிட் வீதியில் அமைந்துள்ள ஆதனமானது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 2012.12.01 ம் திகதி கொண்ட வரைபட இலக்கம் 1194 ல் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட நிலப்பரப்பு ஒன்றும் குளி பத்து தசம் ஏழும் (நில.பர.1ம் குளி 10.70

**எல்லைகள்**

வடக்கு : ஆதன இலக்கம் 115 இனைக் கொண்ட அன்ரன் கிறகரியின் ஆதனம்
கிழக்கு : டேவிட் வீதி
தெற்கு : ஆதன இலக்கம் 111 இனைக் கொண்ட எஸ்.எம்.அல்பிரட் மகள் எம்.எச்.ஜெயவதியின் ஆதனம்
மேற்கு : அல்போன்சஸ் அன்னெற் இன் ஆதனம் இதடங்கலும். இதைச் சேர்ந்தவைகளும் தற்போது நளினி கார்மலிற்றா தேவநாயகம் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது நளினி கார்மலிற்றா தேவநாயகம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

## காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) காரைநகர்

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் கிருகிற கோறி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 05 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார் இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**
**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும்**
**காலமும் 2023.11.04 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 62 | வேரப்பிட்டி | ஸ்ரீ முருகன் முன்பள்ளி கல்வந்தாழ்வு, காரைநகர் | ச.அருள்நாதன் |
| 2 | 63 | மருதபுரம் | வேல்ட் விஷன் கட்டிடம் மருதபுரம், காரைநகர் | ஜெ.சதீஸ் |
| 3 | 64 | மல்லிகை | தலைமைக் காரியாலய மேல் தள மண்டம் அல்லின் வீதி, காரைநகர் | இ.தனுசன் |
| 4 | 65 | விக்காவில் | தலைமைக் காரியாலய கீழ் தள மண்டம் அல்லின் வீதி, காரைநகர் | ச.பிறேமிலன் |
| 5 | 66 | ஊரி | பிட்டியெல்லை அம்பாள் கடற்றொழிலாளர் கூ.சங்கம் பிட்டியெல்லை, காரைநகர் | த.கண்ணதாசன் |

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**இல. 857, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**திரு.கி. சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**

(cs.52696) N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
22 . 07 . 1944



உதிர்வு
31 . 10 . 2023

## தேசபந்து, கலாநிதி இராசையா இராமச்சந்திரன்
## (அகில இலங்கை சமாதான நீதவான்)
## உரிமையாளர் - மெடிகெயார் பார்மசி, சுன்னாகம்)

**தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற மருந்தாளரும், அளவெட்டி மல்லாகம் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், லயன்ஸ் கழகம், மனித உரிமைகள் இயக்கம் மற்றும் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை என்பனவற்றின் முன்னாள் உறுப்பினரும் ஆவார்.**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மற்றும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசையா இராமச்சந்திரன் அவர்கள் கடந்த 31.10.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் (ஓய்வுபெற்ற மருந்தாளர்) அன்புக் கணவரும், மதுராந்தகி (பிரதம செயலாளர் செயலகம் - வடக்கு மாகாண சபை), திருவரங்கன் (கொழும்பு), யசோதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜபதி (சட்டப் பிரிவு, கிழக்கு மாகாண சபை), யாழினி (கொழும்பு), சுபகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தக்ஷாயனி, பிரித்திகா, அவந்திகா, ஆருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விசாலாட்சி, மற்றும் மகேஸ்வரி, நாகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகராஜா மற்றும் நாகேந்திரம், சாம்பசிவம், இராஜலட்சுமி (கனடா), தனலக்ஷ்மி, தெய்வேந்திரம் (கனடா), வன்னியசேகரம் (கனடா), சந்திரசேகரம் (அமெரிக்கா), தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மல்லாகம், பங்களா ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பங்களா ஒழுங்கை, மல்லாகம்.**
**021 2240 976**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 26777) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Yarl IT Hub இன் மாபெரும்
## புத்தாக்கத் திருவிழா

நவம்பர் மாதம்

**03 04 05**

யாழ் கலாசார மத்திய நிலையத்தில்

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும்
பயன்பெறும் ஒரு கொண்டாட்டம்

ஒருக்கா வந்து பாருங்கோ என..

| | | |
|---|---|---|
| மாணவர் புத்தாக்கக் கண்காட்சி | அனுபவ கதைகள் | Enlighting talks |
| Pitching Compition | செய்நிரலாக்க போட்டி | Master Classes |
| புத்தொழில் கண்காட்சி | Maker Space | Fun Activities |
| Networking Sessions | ரோபோட்டிக் போட்டி | பானை, கைத்தறி பயிற்சி |
| விளையாட்டுகள் | Eco System meetup | மற்றும் பல |
| தொழில்நுட்பங்களின் அறிமுகம் | | |

YGC INNOVATION FESTIVAL '23

YGC Innovation Festival '23

YIT HUB


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03.10.1931 | 01.11.2023 |



### திருமதி ஐயாத்துரை பொன்னம்மா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இந்துக் கல்லூரி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை பொன்னம்மா நேற்று (01.11.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் (ஐயாத்துரை ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பொன்னுத்துரை, சரஸ்வதி மற்றும் செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகமணி, இரவீந்திரன் (இளைப்பாறிய உத்தியோகத்தர் - பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), நிர்மலா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரைரத்தினம் மற்றும் கலாராணி (இளைப்பாறிய உப அதிபர் - நவாலி மகா வித்தியாலயம்), இரவிச்சந்திரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌரிசாங்கர் (கனடா), பிரியா, கீர்த்தனா, தர்சனா, அர்ச்சனா, தீபத்றாம் ஆகியோரின் பேர்த்தியும், காவ்யா, அஜய், சிபானி, ஆத்விகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2023) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**18, இந்துக் கல்லூரி வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 618 4503**

(CS 26780) A-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.08.1944 | 01.11.2023 |



### மகேந்திரன் மான்

உடுவிலை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட மகேந்திரன் மான் நேற்று (01.11.2023) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றிச்சட் அரசரட்ணம் சுகிர்தம்மா தம்பதியரின் மகனும், தம்பிராசா சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும், சிவகாமி அம்மாளின் அன்புக் கணவரும், அகல்யா தேனுகா (லண்டன்), வினோதா (பிரதேச செயலகம், உடுவில்), ஸ்ரான்லி அருண் மான் ஆகியோரின் அன்புத் தந்தையும், காண்டீபன் (லண்டன்), சிவசெல்வன் (பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இலேனியா, இவானா (லண்டன்), அபினுஷன், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், ரவீந்திரன் மான், மனோகரி, தயாகரி ஆகியோரின் சகோதரனும், தேவகி அம்பாள், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் தயாநிதி, மகாதேவி, ஜெகதீஜ்வரி, ஸ்ரீதரன், நிர்மலாதேவி, சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.11.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று, அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, தூய இமானுவேல் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**வேம்பன் வீதி,**
**உரும்பிராய் தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 40891) A-1

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15.06.1948 | 01.11.2023 |



### மௌனகுரு புவனேந்திரராசா

**(முன்னாள் ஊழியர் - யாழ். ஐக்கிய வியாபார சங்கம் மற்றும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்)**

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மௌனகுரு புவனேந்திரராசா நேற்று (01.11.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மௌனகுரு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முத்தாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தெய்வேந்திரன், காலஞ்சென்ற விஜயதெய்வேந்திரம், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், கௌரி (தேசிய கணக்காய்வு உப அலுவலகம், யாழ்ப்பாணம்), குமாரதாஸ் (Marvel Marketing (Pvt) Ltd, Jaffna), மோகன்ராஜ் (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), மதுரா (பளை கோட்டக் கல்வி அலுவலகம்) ஆகியோரின் அன்பு தந்தையும், சர்மிளா (யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), பிரதீபன் (பிரதேச செயலகம், கரைத்துறைப்பற்று) ஆகியோரின் மாமனாரும், ஆதினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2023) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**197, அரசடி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 138 6905**

(CS 26783) A-1

## சமுர்த்தி...

கல்மடுவில் உள்ள பெண் சமுர்த்தி உத்தியோகத்தர் வீட்டிலேயே திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது. வீட்டில் பிள்ளைகள் மட்டும் இருந்த சந்தர்ப்பத்தில் திருட்டு நடந்துள்ளது. சுமார் 5 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டத்தில்...

ஹரித அலுத்கே தெரிவித்தார். இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையால் மகப்பேற்று, புற்றுநோய், குழந்தைகள் மற்றும் சிறுநீரக மருத்துவமனைகள் மற்றும் முப்படை மருத்துவமனைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்கள் பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வு வழங்காது, அசமந்தமாகச் செயற்படுகின்றனர் என்று தெரிவித்தே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலுள்ள அனைத்து அரச மருத்துவமனை மருத்துவர்களும் இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் நாளை 3 ஆம் திகதியும், வடமேற்கு மாகாணத்தில் 6 ஆம் திகதியும், சப்ரகமுவ மாகாணத்தில் 7 ஆம் திகதியும் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் 8 ஆம் திகதியும், தென் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாண மருத்துவமனைகளில் மருத்துவர்கள் 9 ஆம் திகதியும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். எதிர்வரும் 10 ஆம் திகதி மேல் மாகாண அரச மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## மின்கட்டண...

முன்னர் மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் துறைசார் அமைச்சர் தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்ததாவது:-

மின்கட்டணம்அதிகரிப்பைஏற்கமுடியாது. அது குறைக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். இது தொடர்பில் பாதீட்டுக்கு முன்னர் அமைச்சர் காஞ்சன விஜயசேகர தீர்மானமொன்றை எடுக்கவேண்டும்.

போராட்டத்துக்குப் பின்னர் சவாலான காலகட்டத்திலேயே அவர் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுப் பதவியை ஏற்றிருந்தார். சிறப்பாகவும் செயற்பட்டு வருகின்றார். அதனால் மக்கள் பக்கம் நின்று முடிவொன்றை எடுக்கவேண்டும் - என்றார். (அ-எ-44)

## வரவு...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூடியபோதே இது தொடர்பில் இணக்கம் காணப்பட்டது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச்சட்டவரைவை இரண்டாம் மதிப்பீடு எனப்படும் 'வரவு - செலவுத்திட்ட உரை' நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 14 முதல் 21 வரை ஞாயிறுக் கிழமைகள் தவிர்ந்து 7 நாள்கள் ஒதுக்கீட்டுச் சட்ட வரைவின் (வரவு - செலவுத் திட்ட) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது என்று செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (அ-எ)

## இலங்கைக்கு...

யில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், மகாநாயக்க தேரர்களிடம் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார்.

மல்வத்து பிரிவின் மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரைச் சந்தித்து ஆசி பெற்ற நிர்மலா சீதாராமன், இலங்கை மக்களுக்காக இந்தியப் பிரதமர் மூலம் வழங்கப்பட்ட உதவிகள் மற்றும் இந்திய மக்களுடன் இலங்கை கொண்டுள்ள வலுவான தொடர்புகள் தொடர்பில் எடுத்துரைத்துள்ளார்.

இந்தியாவுடனான ஆழமான கலாசார உறவுகளை திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் சந்திப்பில் நினைவுகூர்ந்ததுடன், இந்த உறவுகள் மேலும் வலுவடைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா வழங்கிய பொருளாதார உதவிகளுக்கு நன்றி தெரிவித்த மகாநாயக்க தேரர், இலங்கையின் நம்பிக்கைக்குரிய நண்பன் என்ற வகையில், பொருளாதார நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உதவுவதற்கு முதலில் கைகோர்த்தது இந்தியாவே எனவும் குறிப்பிட்டார்.

இந்திய நிதியமைச்சர் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரையும் சந்தித்து ஆசி பெற்றார்.

இலங்கையின் மத வழிபாட்டுத் தலங்களின் சூரிய மின்மயமாக்கல் திட்டத்தை மானிய அடிப்படையில் இந்தியா முன்னெடுக்க உள்ளமை தொடர்பில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களுக்கு இந்திய நிதி அமைச்சர் இந்தச் சந்திப்புகளில் தெளிவுபடுத்தினார். இதற்கான ஒப்பந்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட உள்ளது என்றும் இந்திய நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ)

## நேற்று...

நேற்றுக்காலை முதல் இலங்கை வங்கியின் இணையச் செயற்பாடுகள் நாடு முழுவதும் தடைப்பட்டன. இலங்கை வங்கியின் கைபேசிச் செயலிகளும் இயங்கவில்லை. அதனால் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியாது பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலைவரை இந்த நிலைமை தொடர்ந்தது. மாலை வங்கியின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பின என்று தெரிவிக்கப்படுகின்றது.

வங்கிகளின் இணையச் செயற்பாடுகள் அவ்வப்போது செயலிழப்பது வழமை என்கின்றபோதும், நாடளாவிய ரீதியில் வங்கி ஒன்றின் இணையச் செயற்பாடுகள் செயலிழப்பது அசாதாரணமானது.

அதேவேளை, தற்போது வங்கிகள் பணியாளர்கள் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. வங்கிகளில் பணியாற்றிய பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. தற்போது வங்கிகளில் ஏற்பட்டுள்ள இணையத் தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறை காரணமாக வங்கிச் சேவையில் ஏற்படும் தடங்கல்களை உடனடியாகச் சீர் செய்ய முடியாத சிக்கலுக்குள் வங்கிகள் உள்ளன என்று கூறப்படுகின்றது. (அ-எ-26)

## 'உதயன்'...

வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி உதயன் பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாள் தொடர்பான செய்தியும், ஒளிப்படமும் வெளியாகியிருந்தது. அது தொடர்பாகவும், அன்றையதினம் வெளியாகியிருந்த தமிழ்த் தேசியக் கட்சி மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு அழைப்பு விடுத்திருந்த செய்தி தொடர்பாகவுமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு காலை 9 மணி முதல் பி.ப. 1.30 மணிவரைவாக்குமூலம் பெறப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் பிறந்தநாள் செய்தி மற்றும் ஒளிப்படம் தொடர்பாக அதே வேளை, யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-எ-26)


## மரண அறிவித்தல்



**குமாரசாமி சிதம்பரநாதன்**

வவுனியா கல்வியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி குமாரசாமி சிதம்பரநாதன் அவர்கள் 01.11.2023 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2023) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் (குருமன்காடு வவுனியா) இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

**70/3, குருமன்காடு, வவுனியா.**

(CR 40890) A-1

தகவல் **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி
**வானிலா சத்தியரூபன்** அவர்களின்
அன்புத் தந்தையார்
**தியாகராசா விநாயகமூர்த்தி**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CS 26784) A-1

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.**

## மரண அறிவித்தல்

மலர்வு 01 . 04 . 1978



உதிர்வு 01 . 11 . 2023

**பொன்னையா ஸ்ரீகாந்தன்**

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் அரசவீதி, உரும்பிராய் கிழக்கை வதிவிடமாக கொண்டவரும் உடையார்கட்டு தெற்கை தொழில் நிமித்தம் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா ஸ்ரீகாந்தன் அவர்கள் நேற்று (01.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ரோகினிதேவியின் அன்புக் கணவரும், செல்வி ஸ்ரீகாந்தன் தீபிகாவின் பாசமிகு தகப்பனாரும், அமரர் சரவணமுத்து பொன்னையா புவனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், அமரர்களான கோபாலகிருஷ்ணன் கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், குமுதினி, விஜயகுமுதினி, விஜயகாந்தன், ஜெயகுமுதினி, ஜெயக்காந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சினி, சுபாசினி வேணுதர்சன் துஷாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, உரும்பிராய் தெற்கு இளங்காட்டு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(CS 26782) A-1

தகவல்: **குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

02 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241



**சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் உழவு இயந்திரம் ஓட்டுவதற்கு சாரதி தேவை. சகல வேலைகளும் தெரிந்தவர் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 076 287 8157



அமெரிக்க லொத்தர் விசா
இன்னும் 05 நாட்கள் மட்டுமே
* பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
* அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28


## புருஷோத்தமனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புருஷோத்தமனின் உருவப்படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார் நினைவுரையும் நிகழ்த்தினார்.

2018ஆம் ஆண்டு குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த காலப்பகுதியில் செ.புருஷோத்தமன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியச் செயலராக அப்போது செயற்பட்டார். தமிழ் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் முன்னின்று செயற்பட்டவராவார். (அ-எ-125-27)


# பொன்விழா வாழ்த்து



Congratulations

**ஜூட் பிரகாஷ்**

எண்ணத்தில், செயல் முறையில்,
பேச்சில் எழுத்தின் வீச்சில் விண்ணன்
அவுஸ்ரேலியாவில் வாழ்ந்தாலும்
அன்னை மொழி பேணும் தொண்டன்
பொன் விழாவில் பிரகாசிக்கும்
- எம் - அண்ணன்
ஜூட் பிரகாஷ்க்கு பிறந்தாள்
- வாழ்த்துக்கள்
மலர் மாலை கட்டினால் மாலையிலே
- வாடிவிடும்
தமிழ் மாலை சூட்டிகிறோம் நாம்
தத்துவப் பித்தர்கள்

வாழ்த்துவோர்
தத்துவப்பித்தர்கள்



Happy 50th Birthday!

50 ஆவது பிறந்த நாள் வாழ்த்து




**ஜூட் பிரகாஷ்**

Chartered Accountant
(Australia)

அமைதிப் புயல் இவன்
ஆயுதம் ஏந்தா கலகக்காரன்
இங்கிலீசுப் பேராசிரியன்
ஈழமே வாழ்வானவன்
உலகம் பூரா பே (F) மஸ் இவன்
ஊன்று கோலாய் உடனிருப்பவன்
என்றும் பெருமை கொள்ளும்
- ஜொனியன்
ஏழிசைப் பாடகன் யேசுவின் சீடன்
ஒரு தலைக் காதல் மன்னன்
ஓவியமாய் தீட்டப்பட முடியாதவன்
ஔவைக் கிழவன்
அஃதாவது ஒரு மொக்கு
கொமேர்ஸ்காரன்

பரியோவான் நண்பர்கள்.



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 25 பரப்பு 14 குளி காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 3 1/2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
  திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
  நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை




தொடர்புகளுக்கு:- ஜெயம் 077 814 7389
077 986 5457

(CS 26774) A-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org